திருவிளக்கு பூஜை...



திருநெல்வேலி மீனாட்சிபுரத்தில் உள்ள அருள்மிகு புதுஅம்மன், உலகம்மன் திருக்கோயிலில் திங்கள்கிழமை நடைபெற்ற நவராத்திரி சிறப்பு திருவிளக்கு பூஜையில் பங்கேற்றோர்.

நெல்லையப்பர் கோயிலில் அக். 26இல் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா தொடக்கம்



திருநெல்வேலி, அக். 20: திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர்- காந்திமதியம்மன் திருக்கோயிலில் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா கொடியேற்றம் இம் மாதம் 26 ஆம் தேதி நடைபெற உள்ளது.

இக் கோயிலில் ஆண்டுதோறும் ஐப்பசி திருக்கல்யாண திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. நிகழாண்டு விழாவையொட்டி இம் மாதம் 26 ஆம் தேதி காலை 6 மணிக்கு மேல் 7.30 மணிக்குள் காந்திமதியம்மன் சந்நிதி முன் கொடியேற்றம் நடைபெறும். தொடர்ந்து, நவ. 9 ஆம் தேதி வரை தினமும் காலை மற்றும் இரவு 7 மணிக்கு காந்திமதியம்மன் சந்நிதியில் இருந்து அம்மன் பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி ரத வீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கும் நிகழ்ச்சி நடைபெறும்.

நவ. 4 ஆம் தேதி நள்ளிரவு 1 மணிக்கு தங்கச் சப்பரத்தில் அம்மன் எழுந்தருளி கம்பாநதி காமாட்சியம்மன் திருக்கோயில் சென்றடைவார். 5 ஆம் தேதி முற்பகல் 11 மணிக்கு மேல் நண்பகல் 12 மணிக்குள் திருநெல்வேலி நகரம் காட்சிமண்டபம் அருகே சுவாமி, அம்மனுக்கு காட்சி கொடுக்கும் வைபவம் நடைபெறுகிறது.

பின்பு, 3 மணிக்கு சுவாமி, அம்மன் திருநெல்வேலி நகரத்தின் நான்கு ரத வீதிகளிலும் வீதியுலா வந்து அருள்பாலிப்பர்.

6ஆம் தேதி அதிகாலை 4.30 மணிக்கு மேல் 5.30 மணிக்குள் ஆயிரங்கால் மண்டபத்தில் திருக்கல்யாண வைபவம் நடைபெறும். ஏற்பாடுகளை கோயில் செயல் அலுவலர் சீ.வெங்கடேஸ்வரன் மற்றும் நிர்வாகிகள் செய்து வருகின்றனர்.

சிதம்பரநகர் நகர்ப்புற நலவாழ்வு மையத்துக்கு உபகரணங்கள்



சிதம்பரநகர் நகர்ப்புற நலவாழ்வு மையத்துக்கு உபகரணங்கள் வழங்கிய துணை மேயர் கே.ஆர்.ராஜு.

திருநெல்வேலி, அக். 20: தச்சநல்லூர் அருகேயுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்திற்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

தச்சநல்லூர் அருகே சிதம்பரநகரில் நகர்ப்புற நலவாழ்வு மையம் உள்ளது. இங்கு, பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மேஜை, நாற்காலி உள்ளிட்ட உபகரணங்களை திருநெல்வேலி மாநகராட்சி துணை மேயர் கே.ஆர்.ராஜு, தனது சொந்த நிதியில் இருந்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சிதம்பர நகர் சங்கத் தலைவர் மாரி பாண்டியன், பொருளாளர் பரமசிவன், சண்முகசுந்தரம், மருத்துவர் ஸ்ரீ வைஷாலி, சுகாதார ஆய்வாளர் கார்த்திக், சந்தோஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

விஜயதசமி: நெல்லை கோயில்களில் குழந்தைகளுடன் சிறப்பு வழிபாடு



திருநெல்வேலி சரஸ்வதி கோயிலில் நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்ச்சியில் குடும்பத்தினருடன் பங்கேற்ற மாவட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன்.

திருநெல்வேலி, அக். 20: விஜயதசமி விழாவையொட்டி, திருநெல்வேலியில் உள்ள சரஸ்வதி கோயில் உள்ளிட்ட கோயில்களில் பெற்றோர் தங்களது குழந்தைகளுடன் செவ்வாய்க்கிழமை சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டனர்.

நவராத்திரி நாள்களில் மிகவும் முக்கியமானதாக விஜயதசமி உள்ளது. ஆதிபராசக்தி சூரனை வதம் செய்த இந்த நாளில் குழந்தைகளின் கல்விக்கு அஸ்திவாரமிடும் வித்யாரம்பம் நிகழ்ச்சிகள் நடைபெறுவது வழக்கம்.

அதன்படி, திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர்-காந்திமதியம்மன் கோயில், திருநெல்வேலி நகரத்தில் உள்ள சரஸ்வதி கோயிலில் வித்யாரம்பம் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பெற்றோர் வீட்டில் இருந்து கொண்டுவந்த பச்சரிசி, வாழைப்பழம் உள்ளிட்ட பொருள்களை தாம்பூலங்களில் சந்நிதி முன்பு வைத்து, குழந்தைகளுக்கு மாலையிட்டு அரிசியில் குழந்தைகளின் விரல்களால் 'அ' உள்ளிட்ட எழுத்துகளையும், 1 முதல் 11 வரையிலான எண்களையும் எழுதி வழிபட்டனர்.

திருநெல்வேலி சரஸ்வதி கோயிலில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் ஆனந்த் மோகன் தனது குடும்பத்தினருடன் வழிபட்டார். பின்னர் தனது குழந்தையை அரிசியில் அ எழுத்த எழுத வைத்ததோடு, தங்க ஊசியால் நாவில் எழுத்துகளை எழுதினார்.

மாநகரில் கோயில்கள் மட்டுமன்றி பல்வேறு பள்ளிகளிலும் நடைபெற்ற இந்த வித்யாரம்பம் நிகழ்ச்சிகளில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

பாளை. மத்திய சிறையில் கைதிகள் தாக்கியதில் உதவி அலுவலர் உள்பட இருவர் காயம்

திருநெல்வேலி, அக். 20: பாளையங்கோட்டை மத்திய சிறையில் கைதிகள் தாக்கியதில் சிறை உதவி அலுவலர் உள்பட இருவர் காயமடைந்தனர்.

பாளையங்கோட்டை மத்திய சிறையில் தண்டனை கைதிகள், விசாரணை கைதிகள் என சுமார் 1,400-க்கும் மேற்பட்டவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் செவ்வாய்க்கிழமை பிற்பகல் சிறையில் 5-ஆவது பிளாக்கில் அடைக்கப்பட்டிருந்த இரு விசாரணை கைதிகள் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைகலப்பாக மாறியதாம். இது குறித்து விசாரிக்கச் சென்ற சிறை தலைமை காவலரான மணிகண்டன் (54), உதவி சிறை அலுவலர் காசி பாண்டியன் (53) ஆகியோரை கைதிகள் இருவரும் சேர்ந்து தாக்கியதில் காயமடைந்ததாகக் கூறப்படுகிறது.

இதையடுத்து அவர்கள் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதுகுறித்த புகாரின்பேரில், பெருமாள்புரம் போலீஸார் வழக்குப்பதிந்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

விவேகானந்தா வித்யாஷ்ரம் பள்ளியில்...



வண்ணார்பேட்டை விவேகானந்தா வித்யாஷ்ரம் பள்ளியில் நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்ச்சியில் பங்கேற்றோர்.

திருநெல்வேலி, அக். 20: திருநெல்வேலி வண்ணார்பேட்டை விவேகானந்தா வித்யாஷ்ரம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் விஜயதசமி விழா செவ்வாய்க்கிழமை கொண்டாடப்பட்டது.

இப்பள்ளியின் சேர்மன் சிவசேதுராமன், தாளாளர் திருமாறன், முதன்மை முதல்வர் ராஜலட்சுமி, இயக்குநர் முருகவேள், முதல்வர் ஸ்ரீகுமாரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இவ்விழாவில் முதன்முதலில் முறைப்படி கல்வியைத் தொடங்கும் குழந்தைகளுக்கான வித்யாரம்பம் நிகழ்ச்சி நடைபெற்றது. அதைத் தொடர்ந்து புதிய மாணவ, மாணவிகள் சேர்க்கை நடைபெற்றது. இதில் பள்ளியின் ஆசிரியர், ஆசிரியைகள், பெற்றோர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

வேய்ந்தான்குளம் நீர்வரத்து ஓடையில் ஆணையர் ஆய்வு



மேலப்பாளையம் மண்டலத்தில் மழைநீர் வடிகால் ஓடைகளை செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்த மாநகராட்சி ஆணையர் மோனிகா ராணா.

திருநெல்வேலி, அக். 20: திருநெல்வேலி புதிய பேருந்து நிலையம் அருகேயுள்ள வேய்ந்தான் குளத்திற்கான நீர்வரத்து ஓடையில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து மாநகராட்சி ஆணையர் மோனிகா ராணா செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மேலப்பாளையம் மண்டலத்திற்குள்பட்ட வார்டுகள் 41, 52இல் அதிகம் மழை நீர் தேங்கும் இடங்களான சேவியர் காலனியில் இருந்து வேய்ந்தான்குளத்திற்கு செல்லும் மழைநீர் பாதை, ராஜாநகர், ஹேப்பி காலனி ஆகிய பகுதிகளில் இருந்து பாளையங்கால்வாயை அடையும் நீரோடையில் உள்ள ஆக்கிரமிப்புகள் குறித்து அவர் நேரில் ஆய்வு செய்தார்.

அப்போது, மழைநீர் ஓடைகளில் உள்ள முட்புதர்கள், செடிகளை பொக்லைன் இயந்திரம் மூலம் தூர்வார உத்தரவிட்டார்.

மேலும், வார்டு எண். 41, 42, 53 ஆகிய பகுதிகளிலிருந்து வரும் மழைநீர் புதிய பேருந்து நிலையம் எதிர்புறம் அமைந்துள்ள பயோனியர் குமாரசாமி நகரிலிருந்து வேய்ந்தான்குளத்திற்கு வந்து சேரும் இடத்தில் நெடுஞ்சாலை துறையினரால் கட்டப்பட்டுள்ள பாலத்தில் மழைநீர் வெளியேற வழியில்லாமல் தனியாரால் ஏற்படுத்தப்பட்ட ஆக்கிரமிப்பு மற்றும் முட்புதர்களை பார்வையிட்ட அவர், உடனடியாக அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்களிடம் அறிவுறுத்தினார்.

நீர்வழிகளை சீராக பராமரிப்பதன் மூலம் மட்டுமே பாதுகாப்பாகவும், வெள்ளப் பாதிப்பின்றியும் பருவமழையை எதிர்கொள்ள முடியும். எனவே, மாநகராட்சியின் நடவடிக்கைகளுக்கு நீர்நிலைகளில் குப்பைகள் கொட்டாமல், ஆக்கிரமிப்பு செய்யாமல் பொது மக்கள் ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென ஆணையர் வேண்டுகோள் விடுத்தார்.

ஆய்வின்போது, மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளர் அசோக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் நித்திய பாலையா, ரம்சான் அலி, உதவிச் செயற்பொறியாளர் ராமநாதன், உதவிப் பொறியாளர்கள் சிவசுப்பிரமணியன், ஜீவா, நெடுஞ்சாலை துறை உதவி கோட்ட பொறியாளர் சண்முகநாதன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மதுரையைச் சேர்ந்த இருவர் போக்ஸோவில் கைது

திருநெல்வேலி, அக். 20: போக்ஸோ வழக்கில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த இருவரை திருநெல்வேலி மாவட்ட போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

திருநெல்வேலி அருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்த 15 வயது பள்ளி மாணவியை காணவில்லை என அவரது பெற்றோர் சில நாள்களுக்கு முன்பு அருகில் உள்ள காவல் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன் பேரில் போலீஸார் வழக்குப்பதிந்து விசாரித்ததில், மதுரை மாவட்டம், வாடிப்பட்டி அருகே உள்ள பொந்துகம்பட்டியைச் சேர்ந்த ஜெயமணி மகன் மணி(28), கோடாங்கிப்பட்டியைச் சேர்ந்த கணேசன் மகன் சண்முகசுந்தரம்(23) ஆகியோர் அம்மாணவியை ஏமாற்றி மதுரைக்கு அழைத்துச்சென்று பாலியல் தொந்தரவு அளித்தது தெரியவந்தது. அவர்கள் இருவரையும் போலீஸார் திங்கள்கிழமை கைது செய்தனர்.

தினமணி கதிர் படியுங்கள் ஞாயிறுதோறும்

CHANGE OF NAME

I, **PATHAMUTHU** D/o. MOHAMED THAMBY (native district: Thoothukudi), Date of Birth 05/05/1952 residing at, No 364, Kuthukkal street, Kayalpatnam, Thoothukudi dist - 628204. shall henceforth be known as **FATHIMUTHU.**

PATHAMUTHU

ஆதார் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். Aadhar Housing Finance Ltd

கார்ப்பொரேட் அலுவலகம்: அலுவலக எண்கள் 501 & 503, 5-வது தளம், லைட் பிரிட்ஜ், சகி விஹார் சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை புறநகர் (மாவட்டம்)
நாகர்கோவில் கிளை: எண்.773/8, முதல் தளம், ராஜேஸ்வரி வளாகம், M.S சாலை, வடசேரி, நாகர்கோவில்- 629 001, (தமிழ்நாடு).

பிற்சேர்க்கை-IV **சுவாதீன (POSSESSION) அறிவிப்பு** (அசையா சொத்துக்களுக்கானது)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் படி, கீழே கையொப்பமிட்டுள்ளவர் **ஆதார் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்-ன் (AHFL)** அதிகாரபூர்வ அலுவலராக இருக்கிறபடியால், மேற்படி சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்காணும் கடன்தாரர்களுக்கு/ ஜாமீன்தாரர்களுக்கு **கோரிக்கை அறிவிப்புகளை (DEMAND NOTICE)** அனுப்பி அந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் அதில் காணும் தொகையை செலுத்துமாறு கோரியிருந்தார். ஆனால், கடன்தாரர்கள் மேற்படி பாக்கித் தொகையை முழுவதும் செலுத்தத் தவறிவிட்டதால், கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு, இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், மேற்படி சட்டம், பிரிவு 13 உட்பிரிவு (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதி 8-ன் கீழ் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துகளை அந்தந்த தேதியின் நிறுவனத்தின் அதிகாரபூர்வ அலுவலர் தமது **சுவாதீனத்தில் (POSSESSION)** எடுத்துக் கொண்டார். கடனுக்கு உடான சொத்துகளை மீட்பது தொடர்பான கால அவகாசம் தொடர்பான மேற்படி சட்டம் பிரிவு 13, உட்பிரிவு (8)-ன் ஷரத்துகளை கவனத்தில் கொள்ளுமாறு கடன்தாரர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், முக்கியமாக கடன்தாரர்கள்/ கூட்டுக் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ, நடவடிக்கையோ வைத்துக் கொள்ளக் கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது **ஆதார் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்-க்குச் (AHFL)** செலுத்தவேண்டிய தொகை மற்றும் வட்டியைச் சேர்த்து முழுவதுமாக செலுத்துவதற்குக் கட்டுப்பட்டதாகும்.

வ. எண்	கடன்தாரர்கள் / இணை கடன் தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர்	அசையா சொத்து விவரம்	கோரிக்கை அறிவிப்பு தேதி & தொகை ரூ	சுவாதீனத்தில் எடுத்த தேதி
1.	(ஒருங்கிணைந்த கடன் குறியீடு எண். 21100000766, நாகர்கோவில் கிளை) ராஜேஷ் N (கடன்தாரர்) தங்கம் N (இணை கடன்தாரர்)	சொத்தும் அதன் அனைத்து முக்கிய பகுதிகளும், பரப்பளவு 2.445 செண்ட் நிலம், RS.No.367/11C1 விளாத்துறை கிராமம், விளவங்கோடு தாலுக்கா, கன்னியாகுமரி மாவட்டம். **எல்லைகள்: கிழக்கு:** சொத்து சகாதேவனுக்கு சொந்தமானது, **மேற்கு:** சொத்து பிரான்சிஸுக்கு சொந்தமானது, **வடக்கு:** வடக்கு பாதை மற்றும் **தெற்கு:** சாலை.	23 அக்டோபர் 2025 ரூ.16,70,120.00/-	16 அக்டோபர் 2026

இடம்: நாகர்கோவில் | நாள்: 21.10.2026 — அதிகாரபூர்வ அலுவலர், ஆதார் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட்.,

CHANGE OF NAME

MOHAMED GULAM SYED SALIHA BANU Born on 30/11/2003 (Native district : Tirunelveli) Residing at No: 103A, Sayan Tharagan Street, Melapalayam - 627005 Palayamkottai Thaluk, Tamilnadu, shall henceforth be known as **SANTHU MOHAMED GULAM SYED SALIHA BANU**

MOHAMED GULAM SYED SALIHA BANU

CHANGE OF NAME

I, **MAHALINGAM M, S/o. ERAVANAN M,** born on **05th March 2002** (Native District: Tenkasi) residing at Door No.11, Krishnan Kovil South Street, Pattakurichi, Melapattakurichi, Pin: 627814, Tenkasi TK. Tenkasi District, shall henceforth be known as **MAHALINGAM E.**

MAHALINGAM M

Kadayanallur, 13.10.2026

CHANGE OF NAME

I, **MARIRAJ M, S/o. ERAVANAN M,** born on **28th January 2004** (Native District: Tenkasi) residing at Door No.11, Krishnan Kovil South Street, Pattakurichi, Melapattakurichi, Pin: 627814, Tenkasi TK. Tenkasi District, shall henceforth be known as **MARIRAJ E.**

MARIRAJ M

Kadayanallur, 13.10.2026

இந்தியன் வங்கி

ஒடுக்கப்பட்ட சொத்து மேலாண்மைக் கிளை
100-101, கிழக்கு ஆவணி மூல தெரு, மதுரை -625001

அசையா சொத்துகளின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துகளைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழ் மற்றும் அதற்குத் தொடர்புடைய **2002**-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துகள் மீதான உரிமை அமலாக்க விதிகள் **8(6) & 9(1)** ஷரத்துகள் படி அசையா சொத்துகளின் விற்பனைக்கான **E**-ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் பொது மக்களுக்கும், குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் ஜாமீன்தாரர்கள் அவர்களுக்கு அறிவிப்பது யாதெனில்: ஈடு பெற்று கடன் வழங்கியுள்ள வங்கியிடம் அடமானம்/ ஈடு வைக்கப்பட்டுள்ள இங்கே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துகள் அதிகாரபூர்வ அலுவலர், இந்தியன் வங்கி, **SAM** கிளை, மதுரை அவர்களால் ஆக்கபூர்வ அடையாள சுவாதீனத்தில் **(Constructive Symbolic Possession)** எடுத்துக் கொள்ளப்பட்டன. அந்தச் சொத்துகள், பின்வரும் கடன்தாரர்களிடமிருந்து இந்தியன் வங்கி, **SAM** கிளைக்கு (மதுரை) **(SECURED CREDITOR)** சேர வேண்டிய பாக்கித்தொகை **ரூ.9,44,19,211/- (ரூபாய் ஒன்பது கோடியே நாற்பத்து நான்கு லட்சத்து பத்தொன்பதாயிரத்து இருநூற்றுப் பதினொன்று மட்டும்) (16.10.2026** அன்றுள்ளபடி) மற்றும் வட்டி, செலவுகள், இதர கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் சேர்த்து வசூலிப்பதற்காக **"உள்ளது உள்ளவாறு, உள்ள இடத்தில் உள்ளவாறு, உள்ளதெல்லாம் உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **26.11.2026** அன்று விற்கப்படும். **M/s.** நம்மூரு எஜுகேஷனல் அண்டு சோசியல் டிரஸ்ட் **(NEST)**, பிரதிநிதியாக அதன் நிர்வாக அறங்காவலர் டாக்டர். **C** .சண்முகப்பிரியா, ஃபிளாட் எண். **F-1**, ரீஜாய்ஸ் அபார்ட்மெண்ட், **20/39**, கிருஷ்ணபுரம் தெரு, சூளைமேடு, சென்னை - **600094, M/s.** நம்மூரு குளோபல் ஸ்கூல், பிரதிநிதியாக அதன் தாளாளர் டாக்டர். **C**.சண்முகப்பிரியா, ச.எண். **63/3, 64/2, 65/1**, மதுரை சாலை வழி, கங்கைகொண்டான் கிராமம், திருநெல்வேலி தாலுகா, திருநெல்வேலி **627352**. டாக்டர்.**C** .சண்முகப்ரியா, **W /O .R** .மாரி கார்த்திகேயன், நிர்வாக அறங்காவலர், **M/s.** நம்மூரு எஜுகேஷனல் அண்டு சோசியல் டிரஸ்ட் **(NEST)**, தாளாளர், **M/s.** நம்மூரு குளோபல் ஸ்கூல், ஃபிளாட் எண்.**F -1**, ரிஜாய்ஸ் அபார்ட்மென்ட், **20/39**, கிருஷ்ணாபுரம் தெரு, சூளைமேடு, சென்னை **600094**. திரு. **S**. ராஜாஜி செல்வராஜு, இணை மேலாண்மை அறங்காவலர், **M/s.** நம்மூரு ஜுகேஷனல் அண்டு சோசியல் டிரஸ்ட் **(NEST)**, எண்.**19**, சர்வே எண்.**16/2**, கெம்பதல்லி சாலை, ராயல் கன்ட்ரி பார்க் அருகில், **J.P** நகர், **8** வது கட்டம், **2** வது நிலை, பெங்களூரு தெற்கு - **560083. M.** மாரி கார்த்திகேயன், நிர்வாக அறங்காவலர், **M/s.** நம்மூரு ஜுகேஷனல் அண்டு சோசியல் டிரஸ்ட் **(NEST)**, ஃபிளாட் எண்.**F-1**, ரிஜாய்ஸ் அபார்ட்மெண்ட், **20/39**, கிருஷ்ணாபுரம் தெரு, சோலைமேடு, சென்னை **600094. G.**சிவகுமார், புதிய எண்.**21 F/3**, ஜெனித் ஈஸ்வர் அபார்ட்மெண்ட், மேட்டு தெரு, திருவான்மியூர், சென்னை - **600041. P.**டொமினிக் ஜேம்ஸ் அமிர்தராஜ் பிரிதிவிராஜ், எண்.**P3F**, கிளாசிக் நெஸ்ட் அபார்ட்மெண்ட்ஸ், நாகார்ஜுனா அபார்ட்மெண்ட்ஸ் அருகில், செக்டர் **2, HSR** லேஅவுட், பெங்களூர் தெற்கு - **560102. e**-ஏல விற்பனை முறையில் விற்பனைக்கு உள்ள சொத்தின் முக்கிய விவரங்கள் பின்வருமாறு:

அடமான சொத்தின் விவரம்:

முறையான அடமானத்திலுள்ள **(EM)** விவசாயம் அல்லாத நிலத்தின் அமைவிடம் சர்வே எண் **63/2** மற்றும் **64/1** பரப்பளவு **81.25** சென்ட் மற்றும் **68.75** சென்ட், மொத்தமாக **1.50** ஏக்கர் பரப்பளவு. திருநெல்வேலி பதிவு மாவட்டம், கங்கைகொண்டான் **SRO**, கங்கைகொண்டான் கிராமம் பகுதி **1**, திருநெல்வேலி தாலுகா மற்றும் மாவட்டம் திருமதி.**C**.சண்முகப்பிரியா, திரு.ராஜாஜி செல்வராஜு, திரு.**G**.சிவகுமார், திரு.டொமினிக் ஜேம்ஸ், அம்ரித்ராஜ் பிருத்விராஜ் பெயரில் உள்ளது. **எல்லைகள்: வடக்கில்:** சர்வே எண்கள் **63/1, 63/2 & 64/1** நிலம், **தெற்கில்:** சர்வே எண்கள் **63/3 & 64/2** நிலம், **கிழக்கில்:** சர்வே எண்கள் **66** நிலம் **&** மங்கம்மாள் சாலை, **மேற்கில்:** சர்வே எண்கள் **67** நிலம் **&** திருநெல்வேலி - மதுரை தேசிய நெடுஞ்சாலை.

ரிசர்வ் விலை	ரூ.1,08,00,000/- இலட்சம்
டேவணித்தொகை (EMD)	ரூ.10,80,000/- இலட்சம்
E-ஏல நாள் மற்றும் நேரம்	26.11.2026, காலை 10.00 - மாலை 05.00 மணி
சொத்தின் அடையாள எண்	IDIBH3301107601C
சொத்து மீதான முன் வில்லங்கம்	இல்லை

ஆன்லைன் விலைக் குறிப்பீட்டில் பங்கேற்பதற்கு விலைக்குறிப்பீட்டாளர்கள் எமது **E**-ஏல சேவை வழங்கும் நிறுவனமான **PSB** அலையன்ஸ் பிரைவேட் லிட்.ன் இணையதளம் பார்க்கவும் **(https://www.baanknet.com)**. விலைக் குறிப்பீடு செய்வதில் தொழில் நுட்ப உதவி ஏதும் பெற அழைக்கவும் எண்.**8291220220**. பதிவு நிலை அறிய மற்றும் **EMD** நிலை அறிய அணுகவும்: **support.baanknet@psballiance.com**. சொத்து பற்றிய விவரங்களுக்கும், சொத்து புகைப்படத்திற்கும் விரிவான ஏல விதிமுறை நிபந்தனைகளுக்கும் பின்வரும் **PSB** அலையன்ஸ் பிரைவேட் லிட்.ன் இணையதளத்தில் பார்க்கவும்:**https://www.baanknet.com.** மேலும் விளக்கங்கள் பெற தொ.பே: **8291220220**. சொத்து விவரத்தை **https://www.baanknet.com** என்ற இணைய தளங்களில் பார்வையிடும்போது மேற்குறித்த சொத்து **ID** எண் பயன்படுத்துமாறு விலைக் குறிப்பீட்டாளர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இடம் : மதுரை
தேதி : **17.10.2026**
அதிகாரப்பூர்வ அலுவலர், இந்தியன் வங்கி

QR Code: வங்கி வலை தளம் www.indianbank.in | E-ஏல இணையதளம் | சொத்து அமைவிடம் | சொத்து புகைப்படம்

தொடர்பு நபர்: திரு. சாஜன் ஜோசப் - **9442153709)** (அதிகாரபூர்வ அலுவலர் / கிளை மேலாளர்)

equitas SMALL FINANCE BANK

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(Formerly Known as Equitas Finance Ltd)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை , தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 42995050,

அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV - A யின்படி (விதி 8 (6) யை பார்க்கவும்) - அசையா சொத்துக்கள் விற்பதற்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமம் அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8 (6) உடன் கீழ் அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள் மற்றும் வங்கிக்கு தெரிந்தவரை வில்லங்கள் ஏதேனும் இருப்பின்	நிர்ணய விலை, டேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	மின் ஏல விற்பனைக்கான தேதி மற்றும் நேரம்	கடன் / மொத்த நிலுவைத் தொகை
செல்வம் R பேச்சியம்மாள் S இருவரும் வசிக்கும் இடம்: 46419, மறவர் தெரு, தாமரைசெல்வி, இட்டேரி அல்வானேரி, தமிழ்நாடு, 627354	திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், இட்டேரி கிராமம், ஆனந்தம் நகர், ஃபேஸ்-I, கதவு எண்.2/22A-ல் உள்ள மனை எண்.101, அயன் புஞ்சை சர்வே எண்கள் 48/4, 48/5, 48/14 மற்றும் 48/15-ல் அமைந்துள்ள 1,446.375 சதுர அடி அல்லது 134.37 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலமும் அதிலுள்ள கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும்.	ரூ.6,98,000/- ரூ.69,800/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700009552878 24.06.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.5,26,997/- மேலும் 25.06.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகை ரூ.7,32,828/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, சுரேந்தர் 7305232117, சரவண குமார் 9361834297				
திருமதி விஜய லட்சுமி C/O திரு சாது 23 223 புன்னகலவிளை வீடு, களியல், அருமணி வழியாக, KK Dist, தமிழ்நாடு, 629151 திரு சதுரு C/O திரு சின்னகன் 8 15 D வண்டி பிலங்கல விளை நாகக்கோடு, வந்தனிகோடு அஞ்சல், KK Dist, தமிழ்நாடு-629161	கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், களியல் தற்போது கடையல் எனப் பிரிக்கப்பட்ட கிராமத்தில், பழைய சர்வே எண்.2744/25B 1 4 - க்கு தொடர்புடைய மறுசர்வே எண்.689/8B, தற்போது உட்பிரிவு மறுசர்வே எண்.689/8B1A-ல் அமைந்துள்ள 2,178 சதுர அடி, அதாவது 5 சென்ட் அல்லது 202.35 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலமும், கடையல் நகர ஊராட்சி கதவு எண்.17/82F - ல் உள்ள கட்டிடமும், மின்சார சேவை இணைப்பு எண்.07187005358 உட்பட சொத்து முழுவதும்.	ரூ.18,47,000/- ரூ.1,84,700/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண், EMFMARTM0059095 19.05.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.18,13,385/- மேலும் 20.05.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகைரூ.21,76,479/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, ஜான் ராய் 9003695322, சரவண குமார் 9361834297				
அருண், அனிஷாராணி இருவரும் வசிக்கும் இடம்: 3-96-1மேலேபனசுழி, மீகோட், மலையடி (CI), தமிழ்நாடு, 629153	கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், விளவங்கோடு கிராமத்தில், மறுசர்வே எண்.4/15-ல் அமைந்துள்ள 2,613.36 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலமும் அதிலுள்ள கட்டிடமும் சேர்ந்த சொத்து முழுவதும். நான்கு எல்லைகள்: வடக்கில் – பாதை; தெற்கில் – அகில் அவர்களின் சொத்து; கிழக்கில் – 2 அடி அகலப் பாதை; மேற்கில் – 4 அடி அகலப் பொதுப் பாதை.	ரூ.16,44,000/- ரூ.1,64,400/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். SEMARTM0468637 16.07.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.16,56,947/- மேலும் 17.07.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத் தொகைரூ.21,22,634/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, ஜான் ராய் 9003695322, சரவண குமார் 9361834297				
திரு/திருமதி. செல்லையா சத்தியநேசன் திரு/திருமதி. தங்கம் கணபதி இருவரும் வசிக்கும் இடம்: 21 சமூக ரெங்கையன் கட்டளை, பழையபேட்டை, திருநெல்வேலி, திருநெல்வேலி, தமிழ்நாடு, 627008	திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், சமூகரங்கையன் கட்டளை கிராமம், பழையபேட்டை, சர்தார்புரம் வடக்கு தெரு, மனை எண்.21-ல், T.S. வார்டு எண்.8, பிளாக் எண்.21, T.S. எண்கள் 2476/2A, 2477/2, 2478/2 மற்றும் 2479/2-ல் அமைந்துள்ள 443.26 சதுர அடி அல்லது 41.18 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட நிலமும் கட்டிடமும் சேர்ந்த சொத்து. நான்கு எல்லைகள்: வடக்கில் – 4.50 மீட்டர் சாலை; தெற்கில் – மனை எண்.30; கிழக்கில் – மனை எண்.20; மேற்கில் – மனை எண்.22.	ரூ.12,41,000/- ரூ.1,24,100/- ரூ.10,000/-	26.11.2026 அன்று காலை 11.00 மணி முதல் மதியம் 12.30 வரை	கடன் கணக்கு எண். 700010073775 29.10.2025 அன்றுள்ளபடி கோரிக்கை நிலுவைத் தொகை ரூ.4,42,438.28/- மேலும் 30.10.2025 முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவீனங்கள் மற்றும் பிற. (08.10.2026 அன்றுள்ளபடி மொத்த நிலுவைத்தொகை ரூ.5,37,744/-
சொத்தினை வாங்குபவர் மற்றும் விற்பனை விவரங்களை பற்றிய ஏதேனும் கேள்விகளுக்கு தொடர்பு கொள்ளவும்: அஜித்குமார் 8190005434, சுரேந்தர் 7305232117, சரவண குமார் 9361834297				

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) முன்வைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No.18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 25.11.2026 அன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

மின் ஏல விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை www.equitas.bank.in & https://www.bankeauctions.com என்ற இணையதளம் மூலம் காணலாம்.